# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:17** **தேதி:22.01.2015**

## மத்திய சங்கத்தின் செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

நமது மத்திய சங்கம் தனது இணையதளத்தில் வெளியிட்டுள்ள செய்திகளின் தமிழாக்கத்தை உங்களின் பார்வைக்காக கீழே கொடுக்கபட்டுள்ளது.

**GM(ESTT)உடன் சந்திப்பு:-** 20.01.2015 அன்று நமது துணை பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி BSNLன் GM(ESTT) திரு R.K. கோயல் அவர்களை சந்தித்து கீழ்கண்ட பிரச்சனைகளை விவாதித்தார்.

01. TMக்கான இலாகா தேர்வில் பத்தாம் வகுப்பு என்கின்ற தகுதியை தளர்த்த வேண்டும் என நமது துணை பொது செயலாளர் கேட்டுக் கொண்டார். மாநிலங்களில் உள்ள TM காலி பணியிடங்கள் தொடர்பாகவும், பத்தாம் வகுப்பு தகுதி பெற்றுள்ளவர்களின் விவரங்களையும் மாநில தலைமை பொது மேலாளர்களிடம் கேட்டுள்ளதாகவும், அந்த விவரங்கள் கிடைத்த பின்னர் தேவையான முடிவுகள் மேற்கொள்ளப்படும் எனவும் GM(ESTT) தெரிவித்தார்.

2) TTA இலாகா தேர்வுகள் அறிவிக்கப்பட வேண்டும் என்றும், 10+2 தகுதி இல்லாத TMகளுக்கு தகுதி தேர்வு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் நமது சங்கத்தின் சார்பாக கேட்டதற்கு, தகுதி தேர்வு தொடர்பான பிரச்சனை உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும், தேர்வு விதிகளின் அடிப்படையில் TTA இலாகா தேர்வினை நடத்துவதற்கான நடவடிக்கைகளை நிர்வாகம் மேற்கொள்ளும் என்றும் GM(ESTT) தெரிவித்தார்.

**தொலை தொடர்பு துறையின் DDG(ESTT) உடன் சந்திப்பு:-** 19.01.2015 அன்று நமது துணை பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி, தொலை தொடர்பு துறையின் DDG(ESTT) திருR.K.மிஷ்ரா அவர்களை சந்தித்து கீழ்கண்ட பிரச்சனைகளை விவாதித்தார்.

01) 01.10.2000த்திலும் அதற்கு பின்னரும் பணி நிரந்தரம் செய்யப்பட்ட 110 TSMகளுக்கான ஜனாதிபத்திய உத்தரவு(PRESIDENTIAL ORDERS) வழங்கப்பட வேண்டும் என நமது துணை பொது செயலாளர் கேட்டதற்கு, அது தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என DDG(ESTT)உறுதி அளித்தார்.

02) முதல் ஊதிய மாற்றத்தில் ஏற்பட்ட PAY ANAMOLYக்களை சரி செய்ய வேண்டும் என கேட்டதற்கு அதற்கான கோப்புகளை விரைவு படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக DDG(ESTT) உறுதி அளித்தார்.

**மத்திய சங்கத்துடன் தொடர்பு கொள்ள…:-** போராட்டங்கள் தொடர்பான புகைப்படங்களையும், செய்திகளையும், நமது கிளை மற்றும் மாவட்ட செயலாளர்கள் பலர்

தங்களின் மொபைல் தொலைபேசியில் உள்ள WHATSAPP மூலம் நமது பொது செயலாளரின் தொலைபேசிக்கு அனுப்புகின்றனர். இந்திய நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்யும் நமது பொது செயலாளருக்கு அது சிரமத்தை ஏற்படுத்தும். எனவே தோழர்கள், நமது மத்திய சங்கத்திற்கு இது போன்ற செய்திகளை WHATSAPP மூலம் அனுப்புவதை விடுத்து தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ மட்டும் அனுப்ப வேண்டும்.

**TTA தேர்வு விதிகள்:-** 25.08.2014 அன்று புதிய TTA தேர்வு விதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதனை இறுதி செய்வதற்கு முன்னதாக தொழிற்சங்கங்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டது. ஆனால் அதில் TTA கேடரை மாநில கேடராக (CIRCLE CADRE) அறிவிப்பதாக நிர்வாகம் தெரிவிக்கவில்லை. ஆனால் உத்தரவில் அவ்வாறு அறிவித்ததோடு இதற்கு முன்னால் பணி நியமனம் செய்யப்பட்ட TTAக்கள் மாவட்ட கேடராக இருப்பார்கள் எனவும் கூறப்பட்டு உள்ளது. இது பல பிரச்சனைகளை உருவாக்கும். தொழிற்சங்கங்களோடு கலந்தாலோசிக்கப் படாமல் இது போன்ற முடிவுகளை எடுப்பது சரியல்ல என்றும் நமது மத்திய சங்கம் கடிதம் எழுதியுள்ளதோடு, இந்த உத்தரவில் உள்ள இந்த அம்சம் மாற்றப்பட வேண்டும் என்றும் அது தொடர்பாக தொழிற்சங்கங்களோடு விவாதிக்கபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

**தொலை தொடர்பு சேவைகளின் மீது ”தூய்மை பாரத வரி”:-** பாரத பிரதமரால் துவக்கப்பட்டுள்ள “தூய்மை பாரத” திட்டத்திற்கான நிதியை உருவாக்க அரசாங்கம் தொலை தொடர்பு சேவைகளின் மீது “தூய்மை பாரத வரி”யை விதிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளதாக பத்திரிக்கை செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் இது கட்டணத்தை உயர்த்தும். நிதிச்சட்டத்தில் மாற்றம் கொண்டு வராமல் இது போன்ற புதிய வரிகளை உருவாக்க முடியாது என அரசாங்கத்தை ATTORNEY GENERAL அறிவுறுத்தி உள்ளதாகவும் தெரிய வருகிறது.

**தேசிய போட்டிகளுக்கான KIT ALLOWANCE உயர்வு:-** அகில இந்திய அளவிலான போட்டிகளில் பங்கேற்பவர்களுக்கான KIT ALLOWANCEஐ ரூ.2,000/-லிருந்து ரூ.2,500/- ஆகவும், தேசியப் போட்டிகளில் பங்கேற்பவர்களுக்கு ரூ.2,500/-லிருந்து ரூ.3,000/- ஆகவும் உயர்த்தி BSNL தலைமையகம் உத்தரவு வெளியிட்டுள்ளது.

**ஓய்வூதிய பங்கீடு**:- ஓய்வூதியம் பெறுவதில் காலதாமதம் ஆவதை தவிர்க்க ஆறு மாத காலத்திற்குள் ஓய்வு பெற உள்ளவர்களின் ஓய்வூதிய பங்கீட்டை அவர்கள் பெறும் ஊதிய விகிதத்தின் உயர்ந்த பட்ச அளவில் உடனடியாக கணக்கிட்டு அதனை செலுத்திட வேண்டும் என்றும், அவர்கள் எந்த மாநிலங்களில் முன்னர் பணியாற்றியிருந்தாலும் அவர்களின் கடந்த கால ஓய்வூதிய பங்கீட்டை தற்போது அவர் பணியாற்றும் மாநிலங்களே செலுத்திட வேண்டும் எனவும் கார்ப்பரேட் அலுவலகம் உத்தரவிட்டு உள்ளது.

**தேசியக் கவுன்சிலின் நிலைக்குழுக் கூட்டம்:-** BSNLஊழியர் சங்கமும், தேசியக் கவுன்சிலின் ஊழியர் தரப்பும், நிலைக் குழுக்கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என வலியுறுத்தி வந்துள்ளது. அதனால் 27.01.2015 அன்று அந்தக் கூட்டத்தினை நடத்த நிர்வாகம் முடிவெடுத்திருந்தது. எனினும் சில ஊழியர் தரப்பு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்பட்டது. தற்போது அந்தக் கூட்டம் 10.02.2015 அன்று நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

**BSNLன் புத்தாக்கம் தொடர்பான கூட்டம் 09.02.2015 அன்று நடைபெற உள்ளது:-** நிறுவனத்தின் வளர்ச்சி நடவடிக்கைகள் தொடர்பாக குறிப்பிட்ட கால இடைவெளியில் சங்கங்களோடு நிர்வாகம் விவாதிக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ச்சியாக கேட்டு வந்துள்ளது. நிறுவனத்தின் புத்தாக்கத்தில் அனைத்து ஊழியர்களையும் உறுதியாக கலந்துக் கொள்ளச் செய்ய இது உதவும் என BSNL ஊழியர் சங்கம் உறுதியாகக் கருதுகிறது. சிறிது காலத்திற்கு முன் அப்போது CMD பொறுப்பை கூடுதலாக கவனித்துக் கொண்டிருந்த திரு A.N.ராய் அவர்கள் அந்தக் கூட்டத்தை நடத்துவதாக BSNL ஊழியர் சங்கத்திடம் உறுதி அளித்திருந்தார். இந்த சமயத்தில் BSNLன் புத்தாக்கத்திற்காக ஒரு கால வரையற்ற வேலை நிறுத்தத்திற்கு FORUM அறை கூவல் விட்டுள்ளது. 09.02.2015 அன்று அது போன்ற ஒரு கூட்டத்தினை நடத்த நிர்வாகம் முடிவு எடுத்துள்ளதாக BSNLஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களிடம் Sr.GM(SR) தெரிவித்து உள்ளார். நிர்வாகத்தின் இந்த முடிவினை BSNL ஊழியர் சங்கம் வரவேற்கிறது. இது ஒரு கட்ட நடவடிக்கையாக இல்லாமல் ஒரு தொடர் நிகழ்வாக இருக்க வேண்டும் எனவும் BSNL ஊழியர் சங்கம் விரும்புகிறது.

**IMMUNITY FROM TRANSFERல் பாரபட்சம் களையப்பட வேண்டும்:-** அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்களுக்கு இடையே IMMUNITY FROM TRANSFERல் உள்ள பாரபசம் களையப்பட வேண்டும் என கார்ப்பரேட் நிர்வாகத்தை BSNL ஊழியர் சங்கம் தொடர்ச்சியாக வற்புறுத்தி வந்தது. இதற்கு முன்னர் இருந்த GM(SR) இந்த கோரிக்கையை கடுமையாக எதிர்த்து வந்தார். எனினும் இந்த பிரச்சனையை தேசியக் கவுன்சில் கூட்டத்தில் BSNL ஊழியர் சங்கம் எழுப்பிய போது DIRECTOR(HR) அதனை தீர்வு காண ஏற்றுக் கொண்டார். இந்த சமயத்தில் திரு ஷமீம் அக்தர் Sr.GM(SR) ஆக பொறுப்பேற்றுள்ளார். தேசியக் கவுன்சிலின் இந்த முடிவை அமுலாக்க வேண்டும் என அவரை BSNL ஊழியர் சங்கம் பலமுறை அணுகிய பின்னரும், இது வரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பது வேதனையான விஷயம். 21.01.2015 அன்று நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு Sr.GM(SR) அவர்களை தொடர்பு கொண்டு தனது கடும் வருத்தத்தை தெரிவித்ததோடு உடனடியாக இதற்கான உத்தரவுகள் வெளியிடப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**